# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, POLLACHI

Case No. CC 325/2023

Prosecution Witness 4

| | | | |
|---|---|---|---|
| Name | : சபரீஸ்வரன் | Caste | : |
| Father's Name/ Husband's Name | : த/பெ.முருகேசன் | Calling | : |
| Village | : ஜோதிநகர் சி காலனி | Religion | : |
| Taluk | : | Age | : 27 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 06th day of June 2025.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்)

முதல் விசாரணை :

1. நான் தற்போது ஜோதிநகர் சி காலனியில் குடியிருக்கிறேன். நான் சரக்கு ஏற்றும் வேலை பார்த்து வருகிறேன். கடந்த 30.03.2023 அன்று காலை சுமார் 07.30 மணியளவில் நான் ஜோதிநகரில் உள்ள என்னுடைய வீட்டில் இருந்து அங்குள்ள கழிப்பிடத்திற்கு சென்றுகொண்டிருந்தபோது போலீசார் படம் வரைந்து கொண்டிருந்தார்கள். என்னிடம் கையொப்பம் கேட்டார்கள் நான் கையொப்பமிட்டேன். முன்தினம் சண்டை ஏற்பட்டது என்று என்னிடம் கூறினார்கள். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். (பார்வை மகஜரில் உள்ள 1வது கையொப்பம் **அசாஆ 2** ஆவணமாக குறியீடு செய்யப்படுகிறது) இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

2. இவ்வழக்கின் புகார்தாரரான அசா 1 என்னுடைய உறவினரா என்றால் அவ்வாறு இல்லை. ஏற்கனவே எழுதி வரைந்து வைத்த தாளை காட்டி என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான். எத்தனை ஆவணங்களில் நான் கையொப்பமிட்டேன் என்றால் ஒரு ஆவணத்தில்தான் கையொப்பமிட்டேன். கையொப்பமிட்டவுடன் காவலர்கள் காவல் நிலையத்திற்கு அழைத்தார்களா என்றால்

அவ்வாறு என்னை அழைக்கவில்லை. தற்போது கூறிய சங்கதிகளைத்தான போலிசாரின் விசாரணையிலும் நான் கூறினேன்.

<u>மறு விசாரணை</u>: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/J.Saravanakumar)
Judicial Magistrate No.I,
Pollachi.